மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 18,16,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (26-4-1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8-26 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

69. வருவாய்த்துறையின் 13-4-1960 ஆம் நாளிட்ட எஸ். ஆர். ஓ. ஏ. 2522/1960 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 2-12-1985-ம் நாளிட்ட 1082 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

131. கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1986-87 (தமிழ், ஆங்கிலம்).

132. கோரிக்கை எண் 25—சின்கோனாத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87 (தமிழ், ஆங்கிலம்).

133. கோரிக்கை எண். 45—வனத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1986--87 (தமிழ், ஆங்கிலம்).

134. கோரிக்கை எண். 47—செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87 (தமிழ், ஆங்கிலம்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

135. கோரிக்கை எண். 47—சுற்றுலா குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

136. 1986–87 ஆம் ஆண்டிற்கான சின்கோனாத் துறை பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

137. 1986–87 ஆம் ஆண்டிற்கான சின்கோனாத்துறை பற்றிய வணிக சம்பந்தமான வரவு-செலவுத் திட்டம் (ஆங்கிலம்).

138. 1986–87 ஆம் ஆண்டிற்கான வனத்துறைப் பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

139. சாலைகளும் பாலங்களும் குறித்த மதிப்பீட்டுக் குழுவின் நான்காவது அறிக்கை (எட்டாவது சட்டமன்றப் பேரவை) (தமிழ்).

140. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 9–1–1986 முதல் 29–1–1986 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பு (ஆங்கிலம்).

141. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (பத்தாவது பட்டியல்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I.

(524ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட எண். 566(3527) க்கான விடையைக் காண்க.)

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான பிஸ். 2, பிஸ். 5 மற்றும் பிஸ் 6 என்ற மூன்று கலன்களும் சுருக்கு வலை மீன் பிடிப்பதற்கென கட்டப்பட்டவையாகும், சுருக்கு வலை மீன் பிடிப்பதற்கு தகுதியான மீன் வளம் மற்றும் கடல் தன்மைகள் மேற்கு கடற்கரையில் அமைந்துள்ளன. எனினும் பரிசோதனை முறையில், சிறிது காலம் இக்கலன்கள் தூத்துக்குடியில் மீனவர் பங்கு முறையில் அமர்த்தப்பட்டு செயல்படுத்தப்பட்டன. தொடர்ந்து நட்டம் ஏற்பட்டதால், இக்கலன்கள் மங்களூருக்கே எடுத்துச் செல்லப்பட்டன. எனவே தூத்துக்குடியில் இக்கலன்களில் பங்கு முறையில் பணியாற்றிய மீனவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு அளிப்பதற்கோ, அல்லது மாற்று வேலை வாய்ப்புகள் அளிப்பதற்கான கேள்விக்கு இடமில்லை.